# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 4/2023 | வா.சா. | : 1 |
| பெயர் | : செல்வம் | த/பெ. | : முத்தையா |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : பள்ளபட்டி |
| தேதி | : 29.08.2025 | வயது | : 55/2025 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்

## பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

2) வழக்கில் கண்ட சொத்து ஆனது வீடு என்றால் சரிதான். வழக்கில் என்ன பரிகாரம் கோரி உள்ளேன் என்றால், வீடு என்னுடைய வீடு என்று கேட்டு தாக்கல் செய்துள்ளேன். ஓடு போட்ட வீடு ஆகும். மேற்படி வீடு ஆனது எங்களுக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனாரின் தகப்பனார் அதாவது எனது பாட்டனார் நாகப்பன் என்பவரது பெயரில் பட்டா இருந்ததா என்ற விபரம் எனக்கு தெரியாது. எனது தந்தை பெயரிலோ, எனது பாட்டனார் பெயரிலோ பதிவு ஆவணங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரிதான், எனது தகப்பனார் பெயரில் பட்டா தான் உள்ளது. எனக்கு சிறு வயது இருக்கும் பொழுது பட்டாவானது எனது தகப்பனார்க்கும், எனது சிறிய தகப்பனார் பெயருக்கும் மாறி வந்தது. எனது சிறிய தகப்பனார் பெயர் சின்னணன் ஆகும்.

3) எனது சிறிய தகப்பனார் சின்னணனுக்கு கிழக்கு பக்கம் உள்ள வீடு பகுதியும், எனது அப்பாவிற்கு மேற்கு பக்கம் உள்ள வீடு பகுதியும் எனப் பிரித்து அவரவர்கள் அனுபவித்து வந்தார்கள். எனது அப்பா மற்றும் சித்தப்பாவிற்கு தாவா சொத்தை தவிர மேலும் பல புஞ்சை மற்றும் நஞ்சை நிலங்கள் நிறைய இருந்தது என்றால் சரிதான். நான் சிறுபிள்ளையாக இருக்கும்பொழுது சில

சொத்துக்களையும், எனக்கு விவரம் தெரிந்த பிறகு எனது தகப்பனார் சில சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்துள்ளார். சில கிரைய ஆவணங்கள் எனது தகப்பனாருடன் சேர்ந்து நானும், எனது மூத்த சகோதரரான 1ம் பிரதிவாதியும் சேர்ந்து எழுதிக் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான்.

4) எனது தகப்பனார் 2004 ஆம் வருடம் ஜூன் மாதம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தகப்பனார் இறப்பதற்கு முன்பே எனது தாயார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தகப்பனார்தான் எனது தாயாரை கொலை செய்தார். எனது தந்தை தான் எனது தாயாரை கொலை செய்தார் என்பதற்கான முதல் தகவல் அறிக்கை, புகார் மனு அல்லது குற்ற இறுதி அறிக்கை ஏதாவது இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாயார் இயற்கையாக இறந்துவிட்டார் என்றாலும், எனது தந்தை கொலை செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது தகப்பனார் இறந்ததற்கு பிறகு பொது குடும்ப சொத்தாக ஏதாவது சொத்துக்கள் அனுபவம் செய்தோமா என்றால் ஆமாம். தற்பொழுது அவ்வாறு அனுபவம் செய்த சொத்துக்கள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை, நானும், எனது சகோதரர் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்துள்ளோம்.

5) 2006 ஆம் வருடம் அனைத்து சொத்துக்களையும் விற்று விட்டோம். அவ்வாறு விற்கப்பட்ட கிரைய ஆவணங்களில் எனது சகோதரிகளும் கையொப்பம் செய்துள்ளார்கள். அவ்வாறு விற்கப்பட்ட சொத்துக்கள் தவிர தற்பொழுது தாவா வீடு மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான். எனது அப்பா உயிருடன் இருந்த காலத்திலோ அவர் இறந்த பிறகோ தாவா சொத்தைப் பொறுத்து எனது குடும்பத்திற்குள் பாகப்பிரிவினை ஆவணம் எதுவும் ஏற்படுத்தப்பட்டதா என்றால் இல்லை, வாய்மொழியாக பேசிக்கொண்டோம். வா.சா.ஆ.1 பட்டா நகல் ஆவணமானது 17.09.2020 ஆம் தேதி மண்டல துணை

வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்த 2004ம் வருடத்தில் இருந்து 2020 ஆம் வருடம் வரை எனது தகப்பனார் பெயரில் தான் பட்டா இருந்தது என்றால் சரிதான்.

6) எனது பெயரில் பட்டா மாறுதல் செய்வதற்கு எனது சகோதர சகோதரிகள் ஆட்சேபனை இல்லை என்று எழுத்து பூர்வமாக கடிதம் எதுவும் எழுதிக் கொடுத்தார்களா என்றால் இல்லை. எனது பெயரில் பட்டா மாறிய விபரம் 1ம் பிரதிவாதிக்கு தெரிய வந்தவுடன் முறைப்படியாக வருவாய் வட்டாட்சியர் அவர்களிடம் பட்டாவை ரத்து செய்வதற்கு மனு செய்து அதில் ஆஜர் ஆவதற்கு எனக்கு கடிதம் வந்தது என்றால் சரிதான். அந்த நடவடிக்கைகளில் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் முடிவு எடுக்க முடியாது என்று தெரிவித்துவிட்டார்கள். 1ம் பிரதிவாதிதான் எனது குடும்பத்தில் மூத்த சகோதரர் என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் மக்கள் என்றால் சரிதான்.

7) என்னுடன் பிறந்த பெண் மக்கள் மொத்தம் 4 பேர் என்றால் சரிதான். ஒய்யம்மாள் நாகம்மாள், பஞ்சு மற்றும் மீனாட்சி ஆகியோர் ஆவார்கள். மேற்படி நான்கு சகோதரிகளும் திருமணம் ஆவதற்கு முன்பு தாவா வீட்டில் தான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். ஊரில் நடக்கும் திருவிழா மற்றும் விசேஷங்களுக்கு சகோதர, சகோதரிகள் தாவா வீட்டிற்கு வந்து செல்வது உண்டு என்றால் சரிதான், நான் கூப்பிட்டால் வருவார்கள். எனது சித்தப்பா வீட்டிற்கு கிழக்கு பக்கம் சந்து உள்ளது. தாவா வீட்டிற்கு மேற்கு பக்கம் சந்து உள்ளது, வழக்கு சொத்திற்கு வடக்கே பெரிய வீதி உள்ளது, தெற்கு பக்கம் பெரிய வீதி உள்ளது. எனது சிறிய பாட்டனார் மகன் சின்னன் என்பவர் இருந்தாரா என்றால் அவர் பெயர் சின்ன கருப்பன். மேற்படி சின்ன கருப்பன் மகன் சின்னன் என்பவரது வீடு எனது சித்தப்பா சின்னணன் வீட்டிற்கு கிழக்கு

பக்கம் உள்ளது. அதற்கு கிழக்கே நாகப்பன் என்பவரது வீடுகள் இரண்டு உள்ளது. நாகப்பன் என்பவர் எனது உறவினர்.

8) எனது தகப்பனார் வீட்டிற்கு தென்புறம் கண்ணன் என்பவரது வீடு உள்ளது. கிழக்கு பக்கம் சின்னன் என்பவரது வீடு உள்ளது. எனது பிராது சொத்து விபரத்தில் கிழக்கு பக்க நான்கு மால் மற்றும் தென்புறம் கண்ணன் என்பவரது வீடு உள்ளது என்பதையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. சொத்து விபரம் தவறுதலாக உள்ளதால் வழக்கு பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தனது மேல்படிப்பிற்கு எனது சிறிய தகப்பனார் சின்னணன் என்பவரது மதுரையில் உள்ள வீட்டில் தங்கி படித்து முடித்தார் என்றால் சரியல்ல. கால்நடைத்துறை படிப்பு படிப்பதற்கு எனது சிறிய தகப்பனார் சின்னணன் என்பவர்தான் உதவி செய்து அதற்கான ஏற்பாடு செய்தார் என்றால் சரியல்ல.

9) எனது சிறிய தகப்பனார் சின்னணன் என்பவர் வருவாய் துறையில் பணிபுரிந்து தாசில்தார் வரை பதவி வகித்து ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். சின்னணன் என்பவர் எனது சகோதரரை கால்நடைத்துறை அலுவலகத்தில் கால்நடை ஆய்வாளராக என்ற பதவியை பெறுவதற்கு உதவிகரமாக இருந்து ஏற்பாடு செய்தார் என்றால் சரியல்ல. எனது சகோதரர் பல ஊர்களில் வேலை பார்த்தார் என்றால் சரிதான். கடைசியாக தேனி மாவட்டம், கம்பத்தில் கால்நடை ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி வெளிநாட்டில் பணிபுரிந்து தனது குடும்பத்தை பராமரித்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி இரண்டாம் பிரதிவாதி வெளிநாட்டில் பணிபுரிந்து அதில் கிடைத்த சம்பாத்தியத்தை வைத்தும் திவான் ஹவுசிங் பைனான்ஸ் நிறுவனத்திடமிருந்து கடன் பெற்று கம்பம் நகரில் உள்ள CMS நகரில் உள்ள ஒரு காலி இடத்தை கிரயம் பெற்றார் என்றால் சரியல்ல.

10) 2ம் பிரதிவாதி மேற்படி காலி இடத்தில் Bank of Baroda, அனுமந்தம்பட்டி கிளையில் கடன் பெற்று வீடு கட்டினார் என்றால் அது பற்றி தெரியாது. பழைய ஓட்டு வீடு இடிந்து விட்டதால் அதில் கடன் வாங்கி வீடு கட்ட 2022ம் வருடம் ஆரம்பித்தேன், மாதம் ஞாபகமில்லை. நான் வீடை இடித்து கட்டும்பொழுது, 1ம் பிரதிவாதி என்னைக் கேட்காமல் வீட்டை இடித்து ஏன் கட்டுகிறீர்கள் என்று கேட்டாரா என்றால் பாதி வீடு கட்டி முடித்தபோது கேட்டார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 29.08.2025 கையெழுத்து செய்துள்ளார்.

J.Aafreen Begum
Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.08.29 18:17:20 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.